FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| கிறிஸ்தவ நாகரிகம் | தரம் :- 13 (2018) | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி I

*01. 1)*

அ) பாரியின் பரும்பு மலையானது உங்களை இருந்து கேட்கத்தக்க சிறப்பினை உடையதாகும். பெருமை மிக்க முரசு முழங்கும் மூவேந்தர்கள் ஒன்று சேர்ந்தாலும் அதனைப்பெற முடியாது. உழவர்கள் உழாமலேயே நான்குவிதமான விளைச்சல்களைத் தருவது ஒன்று சிறிய இலைகளை உடைய மூங்கில் இருந்து நெல் விளையும் இரண்டாவது இனியபலாச்சுளைகளைக் கொண்ட பழம் பழுத்து மணம் வீசும் மூன்றாவது செழிப்பான வள்ளிக்கொடிகளில் இருந்து கிழங்கு விளையும் நான்காவது செறிந்த உயர்ந்த மலைகளில் இருந்து அதன் மேற்புறு வர்ணம் அழிந்து அழகிய நீல நிறம் பரவி தேன் சொரியும் வானளாவிய உயரமும் அகலமும் உடையது. அவனது பிறம்பு மலை ஆகும். அந்த மலையிலுள்ள நீழ்ச்சுனைகள் வின்மீன்களைப் போன்றதாகும்.

ஆ) ஒன்று மூங்கிலில் நெல்விளையும்
இரண்டு இனியபலாப்பழம் மணம் வீசும்
மூன்று வள்ளிக்கிழங்கு கொடிகளில் இருக்கும்
நான்கு மலைகளில் இருந்து தேன்சொரியும்.

இ) முரசு ஒலிக்கும் சேர, சோழ, பாண்டியர்கள் எனும் மூன்று வேந்தர்களும் முற்றுகை இட்டாலும் அவனது பிறப்பு மலையைக் கைப்பற்ற முடியாது. போர் வலிமையினால் அதனைப் பெறமுடியாது. என்பதனூடாக கபாழியின் வீரம் புலப்படுகிறது.

ஈ) பறம்பு மலை வானத்தைத் தொடும் யரம் செறிந்ததும் ஆகும். அதன் சுனைகள் வானத்தில் காணப்படும் நட்சத்திரங்களைப் போல் எண்ணற்றதாகும்.

*2)*

அ) கைகேயி வரத்தினைக்கேட்க தசரதன் அதனைத் தவிர்க்க எனக்கூற, தந்த வரத்தைத் தவிர்க்க எனக்கூறுதல். அறமா எனக் கைகேயி கேட்க தசரதன் துண்பம் கொண்டு மண்ணில் வீழ்ந்த சந்தர்ப்பம்.

ஆ) கொடியவளான கைகேயி இவ்வாறு கூற சூரியகுல வேந்தனாகிய தசரதன் நெடியவனான இராமன் முடிசூடாமல் வெம்மையான பரல்கற்கள் நிறைந்த மரங்கள் அடர்ந்த காட்டிற்குச் செல்ல உண்மையாகவே இனி என்னுயிர் பிரிந்து போகும் என்று கூறி இடியினால் தாக்குண்ட பெரியமலை போல சரிந்து வீழ்ந்தான்.

The National e-learning Portal for The General Education

இ) உவமை அணி

இடியேறுண்ட மால்வரை போல

உவமானம் - இடிவீழ்ந்த மலை

உவமேயம் - மண்ணில் வீழ்ந்த தசரதன்

பொதுத்தன்மை – பேரிடியும், சாய்தலும்

ஈ) கொடியாள் - கைகேயி

நெடியான் - இராமன்

02.

அ) உழவுத்தொழில், நெசவுத்தொழில், பகைமையை வீழ்த்தும் போர்த்தொழில் (யுத்தவீரர்), கவிஞர்.

ஆ) தொழில் இல்லாவிட்டால் மக்களும் அழிந்து நாடும் அழிந்து விடும். அத்துடன் மக்களும், நாமும் இல்லாவிட்டால் தொழிலும் செய்ய முடியாது அழிந்து விடும் இரண்டும் ஒன்றுடன் ஒன்று தங்கியுள்ளது.

இ) இருட்சாணம் - உருவகமணி

உவமை அணி - கிளி மூக்கு நிறப்பொட்டு

வைரச்சிரிப்பு

அந்திவானம் வேழமென விண்ணில்

ஈ) தெய்வம் உலகத்தைப் படைக்க அங்கு முதன் முதலில் தோன்றியது படைப்புத்தொழிலே. ஏனெனில் ஐந்தொழில்களில் முதன்மையானது படைப்புத்தொழில் எனவே உலகத்தைப் படைக்கும் போது தொழிலும் தோன்றிவிட்டது.

ஆ)

1) தந்தை சதானந்த என்று அழைத்ததும் சதாந்த என்று அழைத்ததும் சதானந்தனுக்கு உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்குதல்.
பெற்றோரின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தல் தனது குடிகைக்கு அவர்களை அழைத்துச் செல்லல் அவர்களுக்குரிய வசதிகளைச் செய்து கொடுத்தல்.

2) தனது குழந்தை வளர்ந்து பெரியவனாகிவிட்டான் தாடி மீசை வைத்துக்கொண்டு ரிஷி அந்நியனாகிவிட்டான் என நினைத்து அவனை மனதால் தழுக்கொண்டாள். தனது குழந்தை பெரியவனாகி விட்டான், அந்நியனாகிவிட்டான். அவனைத் தழுவிக்கொள்ள ஆசைகொண்டு அது முடியாமையால் மனதால் தழுவிக்கொண்டாள் என ஆசிரியர் கூறுவதில் இருந்து அவள் அவன் மீது கொண்ட அன்பு வெளிப்படுகின்றது.

3) சாபம் கிடைப்பதற்கு முன் அகலிகைக்குசதானந்தன் குழந்தையாக இருந்தான்.
ஆனால் சாபம் பெற்று விமோசனம் கிடைத்த அந்த நீண்ட நாட்களில் அவன் வளர்ந்து ரிஷி மாதிரி ஆகிவிட்டான் என்று சதானந்தனின் வளர்ச்சியையும் அகலிகை நீண்ட சாபம்பெற்று இருந்த கால ஓட்டத்தையும் இங்கு எடுத்துகாட்டி நிற்கின்றன.

*4)*

- அதிகளவான வடமொழிச் சொற்பிரையோகம்

  உ + ம் - ஜபம், தேஜஸ், ரிஷி, நிஷ்டை

- பிரதேசப் பேச்சுத் தமிழ் இல்லாது இலக்கியத்தமிழ் நடை பயன்படுத்தப்பட்டுள்ளது.
- சிறிய பெரிய வாக்கியங்களுடன் அங்கதச்சுவை மூலமான எள்ளல் நடை.

  உ + ம் - ஊழிக்காலம் நிஷ்டையில் கழித்தும் வாடாதகைக்கூட்டமா இந்த நடைக்குத் தளர்நது விடப்போகிறது?

## பகுதி I

*03.*

அ) வினைத்தூய்மையின் சிறப்புப்பற்றி 1வது குறளில் கூறப்பட்டுள்ளது. ஒருவனுக்கு வாய்ந்த துணையின் நன்மை ஆக்கத்தைக் கொடுக்கும். செய்யும் வினையின் நன்மை அவன் விரும்பிய எல்லா நலன்களையும் கொடுக்கும்.

ஆ) 2 – 6 வரையான குறள்களில் பாவம் பழியான செயல்களைச் செய்யக்கூடாது எனக் கூறப்பட்டுள்ளது.

- ஒருவன் புகழும் நன்மையும் தராத தூய்மையற்ற செயல்களை எக்காலத்திலும் செய்யாமல் விட வேண்டும்.
- மேன்மேலும் உயர்ந்திட வேண்டும் என்று கருதுபவர்கள் தம்மதிப்புக்கெடுவதற்குக் காரணமான செயல்களைச் செய்யக்கூடாது.
- உறுதியான உள்ளம் கொண்டவர் தமக்குத்துன்பம் வந்த போதிலும் அதனைத் தீர்ப்பதற்காக இழிவான செயல்களைச் செய்யமாட்டார்கள்.
- என்ன தவறு செய்துவிட்டேன் என நினைத்துக் கவலைப்படுவதற்குரிய செயல்களைச் செய்யக்கூடாது. அவ்வாறு தவறிச்செய்தாலும் மீண்டும் அதுபோன்ற செயலைச் செய்யக்கூடாது.
- பெற்றதாயின் பசியைக்கண்டு வருந்த நேர்ந்தாலும் அதனைப் போக்குவதற்காக அறிவுடையோர் பழிக்கும் செயல்களைச் செய்யக்கூடாது.

இ) அதற்கான காரணம் பற்றி 7 – 10 வரையான குறள்களில் கூறியுள்ளார்.

- தீய செயல்களைச் செய்து பெற்ற செல்வத்தைவிடச் சான்றோர் அனுபவிக்கும் கொடியவறுமையே மேலானதாகும்.
- நூலோர் விலக்கிய செயல்களைச் செய்தவர்க்கு அவை வருவாறு நிறைவேறினாலும் பின்னர் துன்பத்தையே தரும்.
- பிறர் வருந்துமாறு தீவினைகளைச் செய்து பெற்றுக் கொண்ட செல்வம் அவனை வருந்துமாறு செய்து நீங்கிவிடும். ஆனால் நல்ல வழியில் பெற்ற பொருட்கள் முன்னர் இழக்கப்பட்டாலும் பின்னர் வந்து பயன்கொடுக்கும்.
- தீயசெயல்களால் பொருளைச் சேர்த்துப் பாதுகாப்பது பசை மண்ணாவது குடத்தில் நீரை ஊற்றிப்பாதுகாப்பதைப் போன்றது.

ஈ) வினைத்தூய்மையின் சிறப்பினையே இவ்உவமை அணி சிறப்பித்துக் கூறுகின்றது. அதாவது தூய்மையானவழியில் சேர்க்கும் பணம் நிலையாக இருக்கும் என்றும், தூய்மையற்ற தீயவழியில் சேர்த்தபணம் அழிந்து போய்விடும் என்பதைக்குறிக்கவே இவ்வணி கையாளப்பட்டுள்ளது.

கலத்தால் பொருள் செய்தே மாழ்த்தல் பசிமண் கலத்துணீர் செய்திரி இயற்று.

தியவழியில் சேர்த்த பணத்தை பாதுகாத்து வைப்பது பச்சைம ண்பாத்திரத்தில் நீரைச்சேர்த்து வைப்பது போல் பாத்திரமம் அழிந்து நீரும் பயனற்றுப்போகும். அதுபோல் பணத்தைச் சேர்த்தவனும் அழிந்து பணமும் அழிந்து போகும்.

04.

அ) செயல் - தனது அழகுக்கோலத்தைச் சிதைத்தல்

கூந்தலில் அணிந்த மாலையைப்பிய்த்தல் நெற்றிப் பொட்டை அழித்தல், ஆபரணங்களைக் கழற்றுதல், தலையை விரித்துவிட்டுக் கீழே வீழ்ந்து கிடத்தல், தசரதன் தூக்கி அணைத்த போது கைகளை விலக்கி தரையில் வீழுதல்.

சொல் - உனக்கு என்னிடல் இரக்கம் உள்ளதோ எனக் கேட்டல், அவ்வாறாயின் வரத்தை இப்பொழுதே தந்துவிடு எனது மகன் நாடாள வேண்டும். இராமன் நாடாள வேண்டும். இமையோர் சாட்சியாக இதனைத் தருதல் வேண்டும்.

ஆ) அவள் நிலையைக் கண்டு துண்பம் அடைந்து அவளைத் தழுவி எடுத்தல், மனம் சோர்ந்து உனக்கு என்ன நிகழ்ந்து விட்டது? இந்த ஏழு உலகங்களிலும் வாழ்பவர்களில் உன்னை இகழ்ந்தவர் யார்? அவர்கள் அழிந்து விடுவர். உனக்கு நடந்ததைக் கூறியபின் எனது செயலைப்பார் எனக் கூறுதல். தசரதமன்னனின் உயிர் போன்றவன் “மன்னன் ஆவி அன்னாள்”

இ)

- உவமை, அணிகள் மூலம் வெளிப்படுத்தியமை
- மதியின் மறுத்துடைப்பதுபோல் பொட்டினை அழித்தல்.
- வல்லிக்கொடியை வேரொடு அறுப்பது போல் மேகலையை கழற்றுதல்.
- பூக்கள் உதிர்ந்த கொப்பினைப் போல் புவியில் கிடத்தல்.
- மூதேவிகிடப்பதைப்போல் கிடத்தல்.
- மானைத் தூக்கி எடுக்கும் யானை போல் அவளை அணைத்தல்.
- நாகபாம்பு தீண்டிய யானை போல செயலிழந்து நிலத்தில் வீழ்ந்தான்.
- உருவக அணிகளைக் கையாண்டுள்ளமை.
  தீயவை யாப்பினுள்ளும் சிறந்த தீயான் நானகம் எனும் கொடியாள்.
- சாதாரண பேச் யோசப்பாங்கினை கவிதை வழக்கில் கையாண்டமை.
  உ + ம் - அல்லல் எய்தி இரங்கிட வேண்டுவதில்லை. ஈவென், என்பால் பரம்கெட இப்பொழுதே பகர்ந்திடு.

05. அ

- நெருப்பில் விழுந்து தீய்ந்த பூங்கொத்தைப் போலவும் கண்ணில் மேல் தாக்கியதைப் போலவும் புண்ணிலே ஊடுருவிய நெருப்பைப் போலவும், சூழலில் சிக்கியது போலவும் பெருந்துண்பம் அடைந்தார்கள்.
- மேலும் சூசை எகிப்து தேசத்தின் தொலைவினை நினைத்து புவியின் நிழலில்பட்ட மான்போல ஏங்கினான். அங்கு செல்வதற்கு அறிவு இன்டை, உறவு இன்மை, பறிஇன்மை, நெறி இன்மை இவற்றை நினைத்து துன்பமடைந்தாள்.
- மரியன்னை கட்டளையைக்கேட்டு தீயிலே இடப்பட்ட நொய்மையான பூங்கொத்தைப் போல வாடினாள்.

ஆ)

- இளம்சூரியனைப் போன்ற அழகுடையவன்
- முக்காலங்களிலும் நடக்கக்கூடியவற்றை நிகழ்காலம் ஒன்றிலேயே உணரவல்லவன். எல்லாப் பொருளிலும் உண்மைப்பொருளைத் தெளிந்து அறிந்தவர்.
- முழுமையான அறிவுடன் விளங்குபவன்
- மேன்மைப் பண்பு மிக்கவன்
- பெற்றோர் நாட்டை அகலுதற்கு ஆசி கேட்கும் சிறப்பினை உடையவன்.

இ)

- எகிப்து நாட்டில் அவர்களை அறிந்தவர் எவரும் இல்லை
- இங்கு உறவினர்கள் இல்லை.
- அங்கு வாழ்பவர்களிடம் தர்மப்பண்பு இல்லை
- அங்கு செல்வதற்கு வழிதெரியவில்லை
- அந்த வழியைக்கடப்பதற்கு துணையும் இல்லை
- வழிச்செலவுக்குப் பொருள் இல்லை

ஈ)

- தனக்கு எதிரிகள் யாரும் இல்லாதவன்
- தனக்குப் பகைவர்கள் யாரும் இல்லாதவன்
- தனக்கு ஒப்பாக எவரும் இல்லாதவன்
- அழிவற்ற ஆற்றலை உடையவன்
- மானிட சிந்தனைக்கு அப்பாற்பட்டவன்

06. அ) எதிர்பார்ப்பு – மீன், முட்டை இறைச்சி சாப்பிடலாம்

- கொழும்பில் பெரிய வசதியான வாழ்க்கை வாழலாம்.
- கொழும்பில் வீட்டில் இருந்த போது அந்த வண்ண ரோஜாக்களை எடுத்து அடர்த்தியும் நீளமுமான தன் தலையில் சூடிக்கொள்ளலாம்.

The National e-Learning Portal for The General Education

- விலை உயர்ந்த ஆடைகள் தரித்து வண்ணப்பூக்கள் போல் திரியும் சிறுமிகளோடு விளையாட நினைத்தமை ஏமாற்றம் - மீன் முட்டை கிடைத்தாலும் எசமானும் எசமானியும் சாப்பிட்டபின் அவர்கள் கொடுப்பதை மட்டுமே உண்ண வேண்டும்.
  தாயிடம் கேட்டுச்சாப்பிடுவது போல் சாப்பிட முடியவில்லை.
  விரும்பிய இடத்தில் படுக்கும் உரிமை இல்லை.
  தனியான ஒரு கிளாசில் தேநீர் கொடுத்தல்.
  அந்தப்பிள்ளைகளுடன் விளையாட முடியவில்லை
  அந்தப்பூக்களை எடுத்துக்கடவும் முடியவில்லை

ஆ)

- கணவனும் மனைவியும் வேலைக்குச் செல்வார்கள்
- விவசாயம் செய்வார்கள், விவசாயப் பிரதேசமக்கள் வாழ்வியல் அம்சங்கள்.
- பெண்கள் வீட்டு வருமானத்திற்காக கோழி வளர்த்தல்
- பூசணி, வாழைக்காய், கோதம்பைபுட்டு இவை போன்ற உணவுப்பழக்க வழக்கங்கள்.
- சிறுவர்கள் ஒன்றாகச் சேர்ந்து வீட்டுவளவுக்குள்ளும் காட்டு நிலங்களிலும் அயல் அட்டைகளிலும் விளையாடுதல் குன்றிமணிமாலை, அதன் கோதினால் பாம்பு, குரும்பட்டைத்தேர்.
- வன்னிப்பிரதேசப் பேச்சுவழக்குச் சொற்கள்.
- சிறு குறசை வீடு, சாக்குக்கட்டில் படுக்கை.

இ)

- எளிமையான யாழ்ப்பாணத்துப் பேச்சுத்தமிழில் காணப்படுகிறது.
- பாத்திரங்களின் உரையாடல் பேச்சுத்தமிழில் இருந்தபோதும் அபிரியரின் கூற்றுக்கள் இலக்கியத்தமிழில் இடம் பெற்றுள்ளது.
- சிறிய பெரிய வாக்கியங்கள்
- ஆங்கிலச்சொற் பிரயோகங்கள்
- ஆங்காங்கே சில இடங்களில் உவமைத்தொடர்கள்
  உ + ம் - ஆனைமாதிரிக் கொழுத்திட்டாய்.
  வண்ணத்துப்பூச்சிகள் போல் திரியும் சிறுமிகள்
- ஓரிருபழமொழிகள் - “திண்டவீட்டுக்கு இரண்டகம் செய்யிற”

07. அ

- தலைவன் மீதுதான் கொண்ட காதலை மறைமுகமாக தோழிக்கு வெளிப்படுத்தல்.
- அவன்மீது காதல் கொண்டதினால் தாய்க்குப் பொய் உறித் தனது காதலை மறைத்தல்.
- அவனது குறும்புகளை விரும்பியும் ஏற்றுக்கொண்டும் அதனை வெறுப்பவன் போல் வெளியில் காட்டி உள்ளே ஆனந்தம் கொள்ளல்.
- அவனுடைய புன்னகைக்கு அர்த்தம் புரிந்தும் அவன்தன் நகைத்தான் இதுதான் பெரிய சந்தேகம் என தோழியைக் கேட்டல்.

The National e-learning Portal for The General Education

ஆ)

- தலைவிக்கு தலைவன் மீது காதல் வந்ததை அறிந்திருந்தும் அறியாது போல அவனைக் கேள்விகேட்பது.
- தலைவி தோழியை உயிரே, கண்ணே என்றெல்லாம் அழைக்க தோழி தலைவியை மனமே என அழைக்கின்றாள். "நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்லை. இது தோழியின், மதிநுட்பம்.
- தலைவி அவனிடம் பல சந்தேகங்களைக் கேட்க தோழி தலைவியிடம் அதற்கு விடை கூறாது. எனக்கு இரண்டு சந்தேகங்கள் உண்டு அதனை நீ நீக்கினதல் உனது சந்தேகத்திற்கு விடை கிடைத்துவிடும் என தோழி கூறுவது அவளது மதிநுட்பம்.

இ)

- சக்க இலக்கியங்களில் ஒன்றான கலித்தொகைச் செய்யுளை கட்டுரையின் கருவாகக் கொண்டமை.
- நாடகப்பாங்கிலும் கதை கூறும் பாங்கிலும் கட்டுரையை வளர்த்துச் செல்லல்.
- செந்தமிழ் இலக்கியச் சொல்நடையை கையாண்டமை
- வினாக்களைக் கேட்டு விடை இறுக்கி குறிப்பாக வெளிப்படுத்தும் பண்பு.
- சங்க இலக்கிய வழக்கை அவரது கால வழக்காக எடுத்துக் கையாண்டமை.

08. அ)

- கண்ணனை பாசத்தைக்கொட்டி வளர்த்த தாயான யாசோதையின் நிலையினின்று பெரியாழ்வார் பாடியலை இப்பாசுரங்கள்.
- குறும்புபகள் :- வெண்ணெயும் புழுதியும் அனைதல்
  கட்டெறும்புகளைப் பிடித்துக் கன்றுகளின் காதுகளில் விடல், வெண்ணெய் உருட்டி விழுங்கல், போய்ச்சி முலையில் பாதுண்ணல், எண்ணெய்க்குடத்தை உருட்டி, தூங்கிய விள்ளையை கிள்ளி எழுப்பி, ஜண்ணைப்புரட்டி விழிதது பாலும் வெண்ணெயும், தயிரும் திருடி உண்ணல், கன்றில் வாலில் ஓலை கட்டிவிடல், கனிகளை உதிர எறிந்து விழுத்துதல்.

- தீயசக்திகளை ஒறுத்தல் :- கஞ்சனின் வஞ்சனையால் தோன்றிய பூத்தலையும், சடோசுரனையும், காளிங்கனையும் ஒறுத்த செயல்களை மருட்டியும், வெமுட்டியும் அஞ்சியும், கெஞ்சியும், நொந்தும், உலந்தும், வியந்தும் இலயித்தும், இரசித்தும், அங்காங்கு பூரிப்பும் பெருமதமும் வெளிப்படப் பாடுகின்றார்.

ஆ) அடிப்படை வசதிகளற்ற வாழ்க்கை முறை :- உணவு, உடை, இருப்பிட வசதி, தொழில்

- பெரும்பாலான வசதிகளுக்கு வாய்ப்பற்று இருத்தல்
  உ + ம் - வாழிடம், சூழல், தொழில், கல்வி, வணக்கஸ்தலம்
- உயர் வர்க்கத்தினர் அவர்களை வேண்டுமென்றே குற்றவாளியாக்கல், தண்டித்தல், அவமதித்தல்.
- எண்ணம் வாழ்வை அனுபவிக்க முடியாது ஒதுக்கப்படல்.

இ)

- பாழிய அழிவு ஏற்பட்ட பின்னரும் சோர்ந்து விடாது ஓய்வில்லாது வலக்கரத்தால் மண்வெட்டி கொண்டு பழையடி கிண்டுதல்.
- அழிவைப்பார்த்து சோர்வடையாமை
- எல்லாவற்றையும் சேர்த்து முற்றும் சிதற வைக்கும் வானத்தைப் பார்த்து அயந்து நிற்கும் பழக்கமற்றோன்.
- மீண்டும் மிடுக்குடன் ஆரம்பத்தில் இருந்து தனது செயலைத் தொடங்குகின்றான்.

ஈ)

- கணவன் இறந்த செய்தியைக்கேட்டு பொங்கி எழுந்தாள்
- ஒளி பொருந்திய சந்திரன் முகிலோடு சேர்ந்து நிலத்தில் விழுந்தது போல விழுந்தாள்.
- சிவந்த கண்கள் மேலும் சிவக்கும் வண்ணம் அழுது ஏங்கி ஏங்கிக் கணவனை அழைத்தல்.
- கணவன் இறக்க துன்பமடைந்து வருந்துகின்ற பிற பெண்களைப் போல பாண்டியமன்னன் செய்த தவறினால் அவலம் கொண்டு அழிவனோ எனல்.
- கணவனை இழந்து ஏங்கிப் புண்ணியதீர்த்தங்கள் பலவற்றிலும் நீராடித் துன்பமடையும் பிற பெண்களைப் போல யானும்மனங்கலங்கி அழிவனோ எனல்.
- கணவன் இறக்க கைமை நோன்பு நோற்கும் பிற மகளிரைப் போல இப்பிறவியில் புகழை நீக்கி பழியோடு ஏக்கமுற்று யானும் அழிவேனோ எனல்.
- அறக்கடவுளைக் கண்டித்து எல்லோரும் கேட்கும் படியாகச் சூரியனை நோக்கி என் கணவன் கள்வனோ எனக் கேட்டல்.

FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# Field Work Centre
# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017
# Term Examination, November - 2017

| தரம் :- 13 (2018) | புள்ளித்திட்டம் | தமிழ் - II |
|---|---|---|

01) (அ).

| | | | |
|---|---|---|---|
| 1. 1 | 6. 1 | 11. 1 | 16. 5 |
| 2. 3 | 7. 2 | 12. 1 | 17. 1 |
| 3. 2 | 8. 5 | 13. 3 | 18. 2 |
| 4. 4 | 9. 4 | 14. 5 | 19. 4 |
| 5. 2 | 10. 1 | 15. 3 | 20. 3 |

(20 புள்ளிகள்)

(ஆ)

1. சொற்புணர்ச்சியின் போது லகர, ளகர ஈற்றுச் சொற்களின் முன் தகரம்வரின் லகர,ளகர ஈறுகள் ஆய்தமாக திரிந்து குறுகி ஒலிக்கும். அவ்வாறு திரியும் ஆய்தம் ½ மாத்திரையில் இருந்து ¼ மாத்திரையாகக் குறுகி ஒலிப்பது ஆய்தக் குறுக்கம் எனப்படும்.
   உ+ம் :- கல் + த்து = க ஃ றீது
   முள் + த்து = மு ஃ டீது

2. அ ஃ றிணைப் பெயர்கள் ஒன்றன் பாலுக்குரிய ,,து' எனும் வி குதியையோ, பலவின் பாலுக்குரியவை, கள், அ எனும் விகுயையோ பெறாது ஒன்றன் பாலுக்கும் , பலவின் பாலுக்கும் பொதுப் பெயர்களாகும். அப்பெயர்களைக் கொண்டு முடியும் வினைகளைப் பொறுத்தே அவற்றின் பால் எது எனக் கொள்ளப்படும். அவை அ ஃ றிணை இருபாற் பொதுப் பெயர்கள் அல்லது பால்பகா அ ஃ றிணைப் பெயர்கள் எனப்படும்.
   உ+ம் :- குயில் கூவிற்று , குயில் கூவின
   கண் சிவந்தது, கண் சிவந்தன.

3. இயங்கு வினை – நான் கம்பராமாயணம் படித்தேன்
   இயக்கு வினை – மாணவர்களுக்குப் பாடம் படிப்பித்தேன்.
   இயங்கு வினை என்பது தன் வினை.
   இயக்கு வினை என்பது பிற வினை.

4. ஆறு வேற்றுமைத் தொடர்களும் அல்லாத ஏனைய தொடர்களில் அமையும் சொற்றொடர்களுக்கிடையிலான புணர்ச்சி அவ்வழிப்புணர்ச்சி எனப்படும்.
   உ+ம்:- அவன் வந்தான்
   பாம்பு பாம்பு

5. பூக்களைப் பறிக்காதீர்கள்
   அறம் செய்ய விரும்பு

(2x5=10 புள்ளிகள்)

02) அ. படைப்பாளி தன்னைச் சுற்றி வாழும் மனிதர்களையும் சமூகம், சம்பவம், மறுதல்களையும் படைப்புக்களாகத் தருகின்றான்.
- ➢ சமூகத்திற்குச் சில செய்திகளை அறிவிக்கின்றான்.
- ➢ அப்போது ஒரு படைப்பாளி ஆகின்றான்.
- ➢ இதற்கு அவன் படித்தவனாக இருக்க வேண்டியதில்லை.
- ➢ அவன் திசைமாறிச் செல்கின்ற போது விமர்சனத்தின் மூலம் செறிவுபடுத்த முடியும்.

(10 புள்ளிகள்)

ஆ. i. தெலுங்கு, கன்னடம், மலையாளம்

ii. கிறிஸ்து ஆண்டில் மிக முற்பட்ட காலத்தே தமிழ் இலக்கியங்கள் உருப்பெறத் தொடங்கியிருத்தல் வேண்டும்.

iii. தெலுங்கு – நன்னயபாரதம்
கன்னடம் - கவிராஜ மார்க்கம்
மலையாளம் - ராமசரிதம்

iv. இவ்விலக்கியங்களின் திருந்திய வடிவம், முதிர்ந்த பக்குவம் இவற்றை நோக்குமிடத்து காலத்தால் முற்பட்டவை எனக்கூறலாம்.

v. தமிழ் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. ஆயினும் ஏனைய திராவிட மொழிகளுக்கு ஆதி இலக்கியங்கள் எவை எனக் கூறலாம். ஆனால் தமிழ் இலக்கியத்தின் ஆதி இலக்கியம் இப்போது அகப்படுவனவற்றுள் காலத்தால் முற்பட்டவையே.

(2+2+2+2+2=10 புள்ளிகள்)

03) அ. தமிழில் பேச்சு வழக்கும் இலக்கிய வழக்கும்.

- இரட்டை வழக்கு பல மொழிகளில் காணப்படுவது வழக்கம்
- தமிழில் இரட்டை வழக்கு பேச்சு வழக்கு, இலக்கிய வழக்கு
- பேச்சு வழக்கு பிரதேசத்துக்குப் பிரதேசம். வேறுபடும் உதாரணம் யாழ்ப்பாண வழக்கு, மட்டக்களப்பு வழக்கு, மலையக வழக்கு.
- இயல்பான உணர்வை வெளிப்படுத்த பேச்சு வழக்கு உகந்தது.
- புனைகதை இலக்கியங்களில் பேச்சு வழக்கு காணப்படுகின்றது.
- இலக்கிய வழக்கு நியம மொழியாக பிரதேச வேறுபாடு அற்ற வகையில் வழங்குவது.
- பல்வேறு செய்யுள் உரைநடை ஆக்கங்களுக்கும் பயன்படுகின்றது.
- தற்கால இலக்கியங்களில் இரு வகை வழக்கும் பயன்படுத்தப்படுகின்றது.
- கல்வி, அலுவலக ரீதியான விடயங்களுக்கு எப்போதும் இலக்கிய வழக்கே கையாளப்படுகின்றது.

ஆ. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு

- ➢ தமிழ் இலக்கி வளர்ச்சியில் தொடர்ந்தும் ஆண்களே ஆதிக்கம் செலுத்தி வந்திருப்பினும் தமிழ் இலக்கிய வரலாற்றில் பெண்களின் பங்களிப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.
- ➢ சங்ககாலத்துப் பெண் புலவர்கள் அவ்வை, அள்ளூர் நன் முல்லையார், நச்செள்ளையார், வெள்ளிவீதியார் போன்ற பலரின் பங்களிப்பு.
- ➢ சங்கமருவிய காலத்தில் காரைக்கால் அம்மையார்
- ➢ பல்லவர் காலத்தில் ஆண்டாள்.
- ➢ இதன் பின்னர் 20ம் நூற்றாண்டு வரை பெண்களின் இலக்கியப் பங்களிப்பு இன்மை அதற்கான காரணங்கள்.
- ➢ 20ம் நூற்றாண்டு தமிழ் இலக்கியத்தில் பெண்களின் பங்களிப்பு படிப்படியாக அதிகரித்து வரல் அதற்கான காரணிகள்
- ➢ நவீன தமிழ்ப் பெண் கவிஞர்கள், சிறுகதை ஆசிரியர்கள், நாவலாசிரியர்கள்
- ➢ இன்று தமிழ் இலக்கியத்தில் பெண்கள் பெறும் முக்கியத்துவம்.

இ. வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தல்.

- வீதி விபத்துக்கள் தொடர்பான விளக்கம்
- வீதி விபத்துக்களின் விளைவுகள் - உயிரிழப்புக்கள், அங்கவீனம், குடும்பங்கள் பாதிக்கப்படல்.
- வீதி விபத்துக்கான காரணிகள்
- பொதுமக்கள், சாரதிகளிடத்தில் போக்குவரத்து விதிமுறைகள் பற்றிய அறிவின்மை
- வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் கடைப்பிடிக்காமை
- சாரதிகளின் கவனயீனம், மதுப்பாவனை, போதிய பயிற்சியின்மை.
- முறையான கண்காணிப்பின்மை.
- வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்
- வீதிப்போக்குவரத்து நடைமுறைகள் விபத்துக்களின் விளைவுகள் பற்றிய விழிப்பூட்டல்.
- முறையான கண்காணிப்பு
- பாதையமைப்பில் புதிய நுட்பங்கள் (மேம்பாலம், சுரங்கப் பாதை)
- நவீன போக்குவரத்துச் சாதனங்களின் பயன்பாடு.
(நவீன பேரூந்துகள், மின்புகையிரதம்)

ஈ. முத்தமிழ் வளர்ச்சிக்கு விபுலானந்தரின் பங்களிப்பு.
சுவாமி விபுலானந்தர் பற்றிய சுருக்கமான அறிமுகம். (1892 – 1947)
இயற்றமிழ் -இலக்கியம், மொழி, கல்வி, பண்பாடு, வரலாறு, ஒப்பாய்வு, முதலிய சார்ந்த கட்டுரைகளும், நூல்களும் கவிதைகளும்

இசைத்தமிழ் - யாழ்நூல், சங்க இலக்கியங்களிலுள்ள இசைபற்றிய குறிப்புக்கள் சிலப்பதிகார அரங்கேற்று காதை முதலியவற்றிலுள்ள தகவல்கள் தேவாரங்களுடன் தொடர்புபட்ட பண்கள் பற்றிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பண்டைத் தமிழரது இசைபற்றி எழுதப்பட்ட முக்கியமான ஆய்வு நூல், சங்கீத நூல் முதலான பல கட்டுரைகள்.

நாடகத்தமிழ் -
மதங்க சூளா மணி – வடமொழி நாடகமரபுகள், சேக்ஸ்பியரது நாடக மரபுகள், தமிழ் நாடக மரபுகள் பற்றி ஒப்பிட்டு விளக்கும் ஆய்வு நூல்.

உ. கற்றனைத் தூறும் அறிவு
- தலைப்பின் விளக்கம். அறிவின் பெருக்கமும் விரிவும் கற்றலில் தங்கியுள்ளது.
- வாசிப்புப் பழக்கத்தினால் வரும் அனுகூலங்கள்
- இளமையில் இருந்து முதுமைவரை கற்றல்
- ஒரு துறையில் நிபுணத்துவம் பெறல், கற்றலில் தங்கியுள்ளமை.
- அனுபவக் கல்வியின் அவசியம்.
- காலமாற்றத்திற்கேற்ப அறிவு மாறிச் செல்லும்.
- அதற்கேற்ப கற்றலில் ஈடுபட வேண்டிய தன் அவசியம்.
- தொழிற்கல்வி பெறல், மற்றும் தொழில் இருந்து கொண்டே கற்றல்

## பகுதி - II

04) அ. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

- அறம் சார்ந்தவை – திருக்குறள், நாவலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழிநானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி
- அகத்திணை நூல்கள் - ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணை மொழி ஐம்பது, திணை மாலைநூற்றைம்பது, காற்நாற்பது, கைந்நிலை.
- புறத்திணை நூல்கள் - களவழி நாற்பது.
- காப்பியங்கள் - சிலப்பதிகாரம், மணிமேகலை
- பிரபந்தங்கள் - பக்தி இலக்கியங்கள், அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், முதலாழ்வார் பாசுரங்கள்
- இலக்கண நூல் - தொல்காப்பியம்.

ஆ. களப்பிரர் படையெடுப்பும் அரசியல் சமூக மாற்றங்களும் அறநூல்கள் தோன்றக்காரணமாயின.
களப்பிரரின் கொடுங்கோலாட்சி தமிழ்ச் சமுதாயத்தைச் சீர்கேடாக்கியமையினால் அவற்றைச் சீர்செய்ய அறநூல்கள் தோன்றின.
ஒழுக்கச் சீர் கேடுகளும், பொருளாதார வறுமையும் காணப்பட்டமையினால் அவற்றைச் சீர்திருத்தவே அறநூல்கள் தோன்றின்
சங்ககால அகப்புறவாழ்க்கையும் போர் வாழக்கையும் ஏற்படுத்திய தாக்கமே அறநூல்கள் தோன்றக் காரணமாகியது.
களப்பிரரின் வருகையோடு சமண பௌத்த மதங்களின் செல்வாக்கும். அச்சமயங்கள் போதித்த அறக் கருத்துக்களும் அறநல்கள் தோன்றக் காரணமாகியது.
ஆட்சியாளர்கள் அறக்கருத்துக்களை ஆதரித்தமையால், அறநல்கள் தோன்றின.

இ. சங்ககால இலக்கியங்கள் பதினெண் மேற்கணக்கு இலக்கியங்கள் சங்கமருவிகால இலக்கியங்கள் பதினெண் கீழ்க்கணக்கு இலக்கியங்கள்
சங்க இலக்கியப் பொருள் அகம், புறம்
சங்கமருவிய கால இலக்கியப் பொருள், பெரும்பாலும் அறக்கருத்துக்கள் ஓரளவு அகம், புறம், பக்தி என்பன.
சங்க இலக்கியங்கள் தனித்தமிழ் நடை
சங்க மருவிய கால இலக்கியங்கள் வடமொழிக் கலப்பு.
சங்ககாலம் தனிநிலைச் செய்யுள் சங்க மருவிய காலம் - தொடர் நிலைச் செய்யும்.
சங்க காலம் - அகவற்பா, வஞ்சிப்பா முதலிய பாவினங்கள் கையாளப்பட்டன. சங்க மருவிய காலத்தில் வெண்பா அதிகம் கையாளப்பட்டது.

(5+5+5=15 புள்ளிகள்)

05) அ.

- சங்கமருவிய காலப்பிற்பகுதியில் காரைக்கால் அம்மையாரும் முதல் மூன்று ஆழ்வார்களும் ஆரம்பித்த சைவ வைணவ மதங்களின் தோற்றம்.
- பல்லவ மன்னர்களின் சமயப் பொறை உடைகையினால் சைவ வைஷ்ணவ மதங்கள் வளர்வதற்கு ஆதரவு அளித்தமை
- பல்லவ மன்னர்கள் கட்டடக்கலையில் வல்லமை பெற்றமையால் பல ஆலயங்கள் கட்டப்பட்டன. அவற்றை மையமாகக் கொண்டு பக்தி இலக்கியங்கள் தோன்றின.
- சங்கமருவிய காலத்தில் தோன்றிய சமண, பௌத்த மதங்களுக்கு எதிராக சைவ வைஷ்ண போட்டி இட்டு வளர வேண்டிய காரணத்தினால் பக்தி இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.
- பக்தி இயக்கம் செயற்பாடு ரீதியாக ஊர் ஊராகச் சென்று பிரசாரப்படுத்தியமை.

ஆ. 1. காப்பியம் - கொங்கு வேளிர் மடிக்கதை. இதன்ஆசிரியர் கொங்கு வேளீர். இதன் மூல நூல் கங்க அரசன் துர்விநீதன் இயற்றிய பிருகத்கதா எனும் நூல். உதயணன் வரலாற்றைக் கூறுவதனால் உதயணன் கதை எனக் கூறப்படுகின்றது.

2. சிற்றிலக்கியம் - மூவேந்தரையும் பாடுவது மூன்று பகுதிகளாக அமைந்த தொள்ளாயிரம் பாக்களால் ஆனது என்பர். ஆனால் இன்று கிடைப்பன 130 செய்யுட்களே.

பாண்டிக் கோவை – அகத்திணை இலக்கிய மரபுகளைக் கையாண்டு திணைகள் துறைகள் யாவும் கோவையாக அமையும் படி பாடல் ஒவ்வொன்றிலும் பாண்டியன் பெயர் அமையும் படி பாடப்பட்டது.

நந்திக் கலம்பகம் - பல்வகைப் பூக்களால் தொகுக்கப்பட்ட கலம்பக மாலை போல தோள், வகுப்பு, அம்மானை முதலான பல்வகை உறுப்புக்களுடன் அகப்பொருள் புறப்பொருள் விரவிய பல்வகைப் பாக்களால் ஆனது 3ம் நந்தி வர்மனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது.

பாரத வெண்பா – பெருந்தேவனார்

பாரதக் கதை பெரும்பாலும் வெண்பாக்களால் ஆனது சிறுபான்மை அகவல், விருத்தம் என்பனவும் இடம் பெற்றுள்ளன. உரைவிரவியுள்ளது.

ஸ்ரீ புராணம், கயசிந்தாமணி – மணிப்பிரவாள நடையில் அமைந்தது.

இ. சங்க கால அகத்திணை மரபு பல்லவர் கால பக்தியை வெளிப்படுத்துவதற்கு தமது கருத்தியலுக்க ஏற்ப இலக்கிய உத்தியாக பயன்படுத்துதல்.
இறைவனைத் தலைவனாகவும் அடியாளர்கள்தங்களைத் தலைவியாகவும் பாவனை செய்தல்.
கைக்கிளைக் காதலாக அடியார் இறைவனிடம் கொள்ளும் காதலாக இருந்தது.
காமம் மிக்க கழிபடர் கிளவி (பிரிவுத் துயர் ஆற்றாமைமரபுகளை மீறுதல் - சுட்டி ஒருவர் பெயர் கூறல், மடலூரல், கைக்கிளை)

(5+5+5=15 புள்ளிகள்)

06) அ. பெருங்காப்பியம் - சிவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, கம்பராமாயணம்.
சிறு காப்பியம் - சூளாமணி, நீலகேசி, நாககுமார காவியம், உதயகுமாரகாவியம், யசோதர காவியம்.
புராணம் - கந்தபுராணம், பெரிய புராணம்
சிற்றிலக்கியம் - கலியகத்துப் பரணி, தக்காயகப் பரணி, குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ், மூவருலா, நளவெண்பா
தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - இளம் பூரணர்
சொல்லதிகாரம் - சேனாவரையர்
பொருளதிகாரம் - பேராசிரியர்

ஆ. காப்பியங்கள் பெருமளவு தோன்றின ஆதலால் சோழர் காலம் காப்பியகாலம் எனப்படுகின்றது.
ஐம்பெருங்காப்பியங்களுள் 3 இக்காலப்பகுதிக்குரியது. சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி
ஐந்து சிறு காப்பியங்கள்
யசோதரகாவியம், சூளாமணி, நீலகேசி, உதயகுமார காவியம், நாககுமார காவியம்.
காப்பிய இலக்கணம் தோன்றியது. காப்பிய இலக்கணத்தைக் கூறும் தண்டியலங்காரம் எனும் அணி இலக்கண நூல் ரேதன்றியது.
தலை சிறந்த காப்பியம் கம்பராமாயணம் தோன்றியது.
காவியச் சாயலுடைய பெரிய புராணம், கந்தபுராணம் எனும் புராணங்கள் தோன்றின.
வடமொழிச் செல்வாக்கினால் வடமொழிக் காவியங்களை மொழி பெயர்க்கும் காப்பியம் தோன்றியது.

இ. கம்பனின் கவியாற்றல்.

- உயிரோட்டமான பாத்திரச் சித்தரிப்பு – மனித இயல்பை உள்ளவாறு கண்டறியும் ஆற்றல் வாய்ந்த கவிஞன்
- உணர்ச்சிக்கேற்ற சந்த வேறுபாட்டுடன் விருத்தப்பாவை இலாவகமாகக் கையாண்ட திறன்.
- நாடகடத்தி, உரையாடலைச் சிறப்பாக அமைத்தமை.

- சிறந்த கற்பனை வளம்.
- அணிகளைச் சிறப்பாக பயன்படுத்தியமை.
- மக்களுடைய பேச்சிலே பயின்று வரும் சொல் நடை, ஓசைகளைச் சீரிய முறையிலே பயன்படுத்தியமை.
- „கவிச்சக்கரவர்த்தி' என மக்கள் மத்தியில் சிறப்பு.

பிரிவு "ஆ"

07) அ.

- ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்திற்கு முன்பு பற்றிய ஈழத்து இலக்கிய வரலாறு பற்றி ஆராய்வதற்கு எமக்குப் போதிய இலக்கிய ஆதாரம் கிடைக்கவில்லை.
- கி.பி 13ம் நூற்றாண்டிலேயே எமக்கு இலக்கிய ஆதாரம் கிடைக்கின்றது. (சரசோதிமாலை கி.பி 1310இல்)
- இதற்கு முன் தோன்றிய இலக்கியங்கள் பல்வேறு காரணங்களினால் அழிவுபட்டிருக்கலாம்
  1. இயற்கை அழிவுகள் - வெள்ளப்பெருக்கு, புயல், சூறாவளி, கடல்கோள்
  2. பூச்சியினங்கள் ஏடுகளை அளித்திருக்கலாம்.
  3. பேணிப்பாதுகாக்கும் மனப்பக்கும் அம்மக்களிடையே இருந்திருக்காமை.
  4. தமிழ் இலக்கிய வரலாற்றைப் போல ஏடுகளைத் தொகுத்து வைத்த தொகுத்தோன் தொகுப்பித்தோன் மரபு இங்கு காணப்படவில்லை.
  5. இளம் சந்ததிகளுக்கு கையளிக்கும் மரபு இல்லாமை.
- இதனால் தமிழ் இலக்கிய வரலாற்றோடு தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டியுள்ளது. அந்த வகையில் கி.பி 1ம் நூற்றாண்டில் ஈழத்துப் பூதந்தேவனார் பற்றிய குறிப்பு
- கி.பி 3ம் நூற்றாண்டில் சங்கமருவிய காலத்தில் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு விழா எடுத்த செய்தி
- பல்லவர் காலத்தில் தேவாரம் பாடப்பெற்ற திருத்தலங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேச்சரம் பற்றிய செய்திகள்

ஆ. சோதிட நூல்கள் - சரசோதிமாலை
செகராச சேகரமாலை
வைத்தியநூல் - செகராச சேகரம்
பரராசசேகரம்
சமயம் சார்ந்த நூல்கள் - தட்சின கைலாயபுராணம்
திருக்கரைசை புராணம்
வியாக்கிரபாத புராணம்.
வரலாற்றுச் சார்பு – கோணேச்சர கல்வெட்டு
கைலாய மாலை
வையா பாடல்
பரராச சேகரன் உலா
காப்பியம் - இரகுவம்சம்
பொதுமக்கட் சார்பான நூல் - கதிரைமலைப்பள்ளு
நாட்டார் வழிபாடு சார்பானது – கண்ணகி வழக்குரை
சிலம்பு கூறல்
கோலவனார் கதை (8+7=15 புள்ளிகள்)

புராணம்
08) அ. ஞானானந்த புராணம் - போர்த்துக்கேயர் காலம்.
ஒல்லாந்தர் காலம் - பிள்ளையார் புராணம்
ஏகாதசி புராணம், சிவராத்தரி புராணம், யோசேப்பு புராணம், தேவஅருள் வேத புராணம், வலைவீசு புராணம்.

ஆ. பொதுமக்கட் சார்பானவை – பள்ளு, குறவஞ்சி, அம்மானை
போர்த்துக்கேயர் காலம் - ஞானப்பள்ளு, அர்ச் யாகப்பர் அம்மானை
ஒல்லாந்தர் காலம் - தண்டிகை கனகராயன் பள்ளு,
மருதப்பக்குறவஞ்சி
பறாளை விநாயகர் பள்ளு
திருச்செல்வர் அம்மானை
சந்தியேகுமையூர் அம்மானை
இ. நாடக நூல்கள் - வாளபிமன் நாடகம்
அலங்கார ரூபன் நாடகம்
அதிரூபாவதி நாடகம்
நொண்டி நாடகம்
அனுவுருத்திர நாடகம். (5+5+5=15 புள்ளிகள்)